# Are we invisible?

**Women's experiences of Sri Lanka's economic crisis from the Batticaloa District**

# நாங்கள் கண்ணுக்கு தெரியாதவர்களா?

**இலங்கையின் பொருளாதார நெருக்கடி பற்றிய மட்டக்களப்பு மாவட்ட பெண்களின் அனுபவங்கள்**

**Research Highlights / ஆய்வின் சிறப்பம்சங்கள்**


**Suriya Women's Development Centre**
**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**



December / டிசம்பர் 2024

In May 2022, the Government of Sri Lanka announced that it is defaulting on all its foreign debt repayments. The country was in a severe economic crisis - like it had never experienced after gaining independence in 1948 – because it ran out of dollar reserves to pay for essential imports and to pay back loans borrowed from foreign financial institutions and other countries.

The weeks and months that followed the announcement saw people's lives come to a standstill, as they languished for hours in long queues to purchase essential food items, medicines, cooking gas and fuel due to widespread shortages. Hospitals ran out of supplies, medicines and equipment. Schools postponed exams due to paper shortages. Daily power-cuts extended for several hours. Prices of goods rapidly increased and most households were no longer able to put food on the table.

Soon, people's frustrations over the economy boiled over, and were channeled into small protests in street corners and eventually grew into a mass movement - the aragalaya/ porattam and occupation of several public spaces – Gotago Gamas, at a scale that was not witnessed in Sri Lanka's recent history. The resounding call was the immediate resignation of the incumbent President Gotabaya Rajapaksa and for a system change.

The months long protests culminated on July 09, 2022 when thousands of protestors from all over the country converged in the Galleface promenade in Colombo. The President fled the country and officially resigned from his post on July 14.

இலங்கை அரசாங்கம் அதன் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளை முற்றிலும் ரத்துச் செய்வதாக 2022ஆம் ஆண்டு மே மாதம் அறிவித்தது. 1948இல் சுதந்திரம் அடைந்த பின்பு எதிர்நோக்காத அளவிற்கு நாடு பாரியதொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. அத்தியாவசிய இறக்குமதிகளுக்கும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து பெற்ற கடன் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும் போதியளவு டொலர் இருப்புகள் போதாமையே நெருக்கடிக்கு காரணமானது.

அறிவித்தலைத் தொடர்ந்த வாரங்களிலும் மாதங்களிலும் மக்களின் அன்றாட வாழ்க்கை முடக்கப்பட்டது. பரவலான பொருட் தட்டுப்பாடுகளால் அத்தியாவசிய உணவு, மருந்து மற்றும் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் இரவு பகலாக நின்று அல்லல்பட்டனர். வைத்தியசாலைகளில் பொருட்கள், மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இல்லாது போயின. கடதாசி தட்டுப்பாட்டினால் பாடசாலைப் பரீட்சைகள் பிற்போடப்பட்டன. நாளாந்தம் மணித்தியாலங்களாக நீடிக்கும் மின்சாரத் துண்டிப்புக்கள் அமுல்படுத்தப்பட்டன. விலைவாசி அதிகரித்ததால் பெரும்பாலான வீடுகளில் மேசையில் உணவை வைப்பதே சவாலாக மாறியது.

பொருளாதார நிலை காரணமாக மக்களிடையே ஏற்பட்ட விரக்தி, விரைவாக பொங்கியெழ ஆரம்பித்தது. வீதி ஓரங்களில் சிறிய ஆர்ப்பாட்டங் களாக தொடங்கி, பின்பு பொது இடங்களில் தொடர்ச்சியான ஆக்கிரமிப்புக் களாகவும் (கோட்டா-கோ கிராமம்) இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் காணக்கிடைக்காத பாரிய ஒரு போராட்டமாகவும் மக்கள் இயக்கமாகவும் (அரகலய) உருமாறியது. அப்போது ஜனாதிபதியாக பதவியில் இருந்த கோத்தபாய ராஜபக்ச அவர்களின் உடனடியான ராஜினாமாவும் கட்டமைப்பு மாற்றமுமே அந்த இயக்கத்தின் ஒருங்கிணைந்த குரலாக எழுந்த கோரிக்கையானது.

சில மாதங்களாக நீடித்த போராட்டம், நாடு முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கொழும்பு காலி முகத்திடலில் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக 2022ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி குவிந்ததோடு உச்சக்கட்டத்தை அடைந்தது. நாட்டை விட்டு வெளியேறிய ஜனாதிபதி ஜூலை 14ஆம் திகதி தனது பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகினார்.

Ranil Wickremesinghe, a staunch market fundamentalist, was appointed as the President through a parliamentary manoeuvre. Under his leadership, the 17th agreement with the International Monetary Fund (IMF) was signed. A harsh austerity programme which effectively passed on risks of the economic recovery towards ordinary working people was implemented. Oppressive laws were used to stifle dissent to such policies.

People have now lived for two years under severe austerity measures. Social indicators on nutrition, food security, health, education etc. already reflect the extent of the pain inflicted on people.

Sri Lanka had to negotiate with the powerful external creditors to restructure the debt to make it sustainable. The Wickremesinghe government committed to offer the worst deal for Sri Lanka, offering better terms for the lenders.

The Presidential and General elections in 2024 saw people rejecting the old political class and voting in the National People's Power – a party that has never been in power and a parliament with a majority of new faces. Once again, people are hopeful that a different economic path can be forged for Sri Lanka.

While all Sri Lankans were impacted by the economic crisis and an austerity-oriented recovery programme, it did not affect all communities equally. Some were affected much more than others. How did the economic crisis impact women? This report outlines the findings on the impact of the economic crisis on women based on research conducted in the Batticaloa District.

உறுதியான சந்தை அடிப்படைவாதியான ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற தெரிவின் மூலம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவரது தலைமையின் கீழ், சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ.எம்.எஃ /IMF) 17வது ஒப்பந்தக் கையெழுத்தானது. பொருளாதார மீட்சியின் அபாயங்களை சாதாரண உழைக்கும் மக்களை நோக்கி திசை திருப்பும் கடுமையான சிக்கனக் கொள்கை செயற்படுத்தப்பட்டது. இத்தகைய கொள்கைகளுக்கு எதிரான குரல்கள் தடுக்க அடக்குமுறை சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன.

தற்போது கடுமையான சிக்கன நடவடிக்கைகளின் கீழ் மக்கள் இரண்டு ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். ஊட்டச்சத்து, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி போன்ற சமூக குறிகாட்டிகள் ஏற்கனவே இதனால் மக்களுக்கு ஏற்படும் வலியின் ஆழத்தை பிரதிபலிக்கின்றன.

இலங்கை தனது கடனை நிலையானதாக மறுசீரமைக்க சக்திவாய்ந்த வெளிநாட்டு கடனாளிகள் உடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது. விக்ரமசிங்க அரசாங்கம் கடன் வழங்குநர்களுக்கு சிறந்த விதிமுறைகளை வழங்கி இலங்கைக்கு பாதகமான ஒப்பந்தத்தை உறுதி செய்தது.

2024ல் நடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில், மக்கள் பழைய அரசியல் வர்க்கத்தை நிராகரித்து, ஒருபோதும் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத ஒரு கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, மற்றும் பெரும்பான்மையான புதிய முகங்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்துள்ளனர். மீண்டும் இலங்கைக்கு மாற்றுப் பொருளாதார பாதையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே உருவாகியுள்ளது.

இலங்கையர்கள் யாவரும் பொருளாதார நெருக்கடி மற்றும் சிக்கனக் கொள்கை மீட்புத்திட்டத்தால் பாதிக்கப்பட்டாலும், அனைத்து சமூகங்களையும் சமமாக பாதிக்கவில்லை. சிலர் மற்றவர்களை விட அதிகமாக பாதிக்கப் பட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடி பெண்களை எவ்வாறு பாதித்தது? இந்த ஆய்வு அறிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் பெண்கள் மீதான பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்த அனுபவங்களை உள்ளடக்கியுள்ளது.

# Historical background/ வரலாற்றுப் பின்னணி

**1930 +**

- The Great depression that impacted the island is similar to the economic crisis we are experiencing now. The government responded with introducing social protection including free health, free education and food subsidies.
- இலங்கையில் தற்போது நாம் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடி எமது தீவைத் தாக்கிய பொருளாதார பெரும் மந்த நிலைக்கு ஒப்பானது. அதற்கு தீர்வாக அரசாங்கம் இலவச சுகாதாரம், இலவச கல்வி மற்றும் உணவு மானியம் போன்ற சமூக பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகம் செய்தது.

**1948 - 1976**

- A welfare-state model followed after Sri Lanka gained independence expanding social protection and redistribution of land. Sri Lanka's human development indicators grew, including for women and girls in relation to nutrition, health and literacy.
- இலங்கை சுதந்திரம் பெற்றதை தொடர்ந்து நலன்புரி அரச வடிவமைப்பின் கீழ் சமூகப் பாதுகாப்பை விஸ்தரித்து. மேலும் நில உரிமை மீள்பங்கீடு செய்யப்பட்டது. இலங்கையின் போசாக்கு, சுகாதாரம் மற்றும் கல்வி சார்ந்த மனித அபிவிருத்திச் சுட்டிகள் இந்தக் காலப்பகுதியில் அதிகரித்தது.

**1977 - 2008**

- Shifted to open-economy model liberalising trade and reducing state funds for social protection. Imports grew faster than exports, creating the need for obtaining loans. Women's migration of labour from rural to urban areas and as migrant workers abroad was exploited more by foreign capital.
- திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் வெளிநாட்டு வர்த்தகம் அதிகரித்தது. சமூகப் பாதுகாப்புக்கான அரச செலவினம் குறைந்தது. ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகரித்து கடன் பெறும் நிலையை உருவாக்கியது. பெண்களின் உழைப்பு கிராமங்களில் இருந்து நகரங்கள் நோக்கி நகர்ந்ததோடு சுரண்டலும் அதிகரித்தது.

**2009 - 2020**

- Foreign capital lowed in after the war ended, at higher interest rates and for large-scale infrastructure development, real estate and urbanisation. People's livelihoods, rural economy and social protection were ignored.
- போர் முடிந்த பின் வெளிநாட்டு மூலதனம் நாட்டினுள் பாய்ந்தாலும், அவை அதிக வட்டி வீதத்திற்கும் பாரிய உட்கட்டுமானங்கள், வர்த்தகக் கட்டிடங்கள் மற்றும் நகரமயமாக்கல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. மக்களின் வாழ்வாதாரம், கிராமிய பொருளாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவை புறக்கணிக்கப்பட்டது

**2020-**

- The country's huge foreign debt could not be paid back when Covid-19 pandemic further impacted the economy. While only the rich benefited from the debt, the risks of the debt-trap and repayment of it was passed on to the working people.
- கோவிட்-19 தொற்று நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பாதிக்க இலங்கையின் பாரிய வெளிநாட்டுக் கடனை மீண்டும் செலுத்த முடியாது போனது. எடுத்த கடன்களின் நன்மைகளை செல்வந்தர்கள் மட்டுமே அனுபவித்தாலும் கடன் பொறியின் அபாயங்கள் மற்றும் மீள் செலுத்தும் பொறுப்பு உழைக்கும் மக்களிடையே சுமத்தப்பட்டது.

## Research Questions / ஆய்வு வினாக்கள்

- How did women experience the economic crisis in the Batticaloa District, Sri Lanka?
  இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் பெண்கள் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு அனுபவித்தார்கள்?
- How has the economic situation of women changed in comparison to before the economic crisis?
  பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் ஒப்பிடுகையில் பெண்களின் பொருளாதார நிலை எவ்வாறு மாறியுள்ளது?
- How did women perceive the responses to the economic crisis?
  பொருளாதார நெருக்கடிக்கான நடவடிக்கைகளை பெண்கள் எவ்வாறு உணர்ந்தார்கள்?
- How do women perceive as the way out of the economic crisis?
  பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியேறும் வழிமுறைகள் பற்றிய பெண்களின் அபிப்பிராயங்கள் என்ன?

## Research Process / ஆய்வு முறைமை

**Macro-level economic analysis**
பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வு

*August / ஆகஸ்ட் – December / டிசம்பர் 2023*

**Data-collection**
தரவு சேகரிப்பு

*November / நவம்பர் 2023 – April / ஏப்ரல் 2024*

- 9 focus groups with women
  பெண்களுடன் குழு நேர்காணல்கள்
- 7 interviews with women
  பெண்களுடன் நேர்காணல்கள்
- 3 interviews with local / national government officials
  அரச அலுவலர்களுடன் நேர்காணல்

**Report Development**
அறிக்கை தயாரிப்பு


*May / மே 2024 – August / ஆகஸ்ட் 2024*

Data-analysis, report writing & creating research dissemination material
தரவு பகுப்பாய்வு, அறிக்கை எழுதல் மற்றும் ஆய்வு வெளியீடுகளைத் தயாரித்தல்

**Final Report & Publication**
இறுதி அறிக்கையும் பொது வெளியீடும்

*December / டிசம்பர் 2024*

# The research design / ஆய்வு வரைவு




The research was conducted with Tamil and Muslim working women from seven villages in the Batticaloa District. The women are engaged in small agriculture and fisheries, domestic work, garment factories, palmyrah and reed products and small livelihoods.

The age range of the women who participated in the research was between 20 – 60 years. Furthermore, women with disabilities and transwomen also participated in the interviews.

The incomes of all the women who were interviewed is under the poverty-line for Batticaloa district. Among them, women-heads of households, women who faced sexual, domestic and war-related violence.

The research also included a samurdhi officer and women's development officer for the Batticaloa District and an official in the Welfare Benefits Board in Colombo.

மட்டக்களப்பு மாவட்டத்தில், குறிப்பாக ஏழு கிராமங்களில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லீம் உழைக்கும் பெண்களை உள்ளடக்கி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் சிறு விவசாயம், கடற்தொழில், வீட்டு வேலை, ஆடைத் தொழிற்சாலை, பனை மற்றும் பன்புல் கைத்தொழில் மற்றும் சிறு வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பெண்களாகும்.

ஆய்வில் பங்குபற்றிய பெண்களின் வயது எல்லை 20-65ற்கும் இடைப்பட்ட தாகவுள்ளது. அத்தோடு, மாற்றுத்திறனாளிகளான பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆய்வில் பங்குபற்றியுள்ளனர்.

நேர்காணப்பட்டவர்கள் யாவரும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான வறுமைக் கோட்டுக்கு குறைந்தளவு வருமானம் பெறுபவர்களாக உள்ளனர். அவர்களில் குடும்ப பெண்-தலைமை தாங்கிகள், பாலியல், வீட்டுவன்முறை மற்றும் போர்க்கால வன்முறையை சந்தித்தவர்கள் உள்ளடங்குவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிபுரியும் சமுர்த்தி அலுவலகர் ஒருவரோடும், பெண்கள் அபிவிருத்தி அதிகாரியுடனும் மேலும் கொழும்பில் நலன்புரி நன்மைகள் சபையிலிருந்து ஒரு அதிகாரியுடனும் நேர்காணல்கள் ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

About 200 000 families live in the Batticaloa District according to the Department of Census and Statistics. The population is composed of 70% Tamils, 27% Muslims and 1% Burgers and 1% Sinhalese.

70% of the population are in rural settlements. Much of the cultivation in the district depends on rain fed irrigation scheme. However, the largest occupation groups in the district are made up of unskilled labourers (60 000) and has migrated for foreign employment (40 000).

52% of the population, around 325 000 are women and significantly contribute to the local economy. Women are engaged in agricultural crop production, livestocks, fisheries and non-agricultural economic activities to earn incomes. There are around 36 000 women-headed households in the district.

There are 346 Grama Niladari(GN) divisions in the Batticaloa District. With regards to basic needs, 87 GN divisions do not have access to pipe borne water. Only 250 divisions have a road for transporting bus/van/lorries and in 201 divisions, the minimum distance to access public transport is more than 5 Kms.

Those from 134 GN divisions must travel a minimum distance of 5kms or more to access a public or private hospital, while 140 divisions have access to maternity/baby clinics. 46 GN divisions do not have access to an early childhood development center, while 247 divisions do not have children's park facilities. The minimum distance to access a marketplace / fair / public store is 5 kms or more for 131 GN divisions.

Out of the GN divisions 90% recorded facing floods, while 66% experienced droughts in the last decade.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 200,000 குடும்பங்கள் வாழ்கின்றனர். இதில் 70% தமிழ், 27% முஸ்லிம், 1% பறங்கி மற்றும் 1% சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள்.


70%ஆனவர்கள் கிராமப்புற குடியிருப்புகளில் உள்ளனர். பெரும்பாலான பயிர்ச்செய்கை மழை நீரை நம்பி மேற் கொள்ளப்படுகின்றது. இருப்பினும், மாவட்டத்தில் அதிகமானோர் ஈடுபடும் தொழில்களாக நாட் கூலித் தொழிலாளர்கள் (60 000) மற்றும் வெளிநாட்டு வேலைக்காக (40 000) இடம்பெயர்ந்தோர்கள் உள்ளடங்குவர்.

சனத்தொகையில் 52% ஆனவர்கள், அதாவது 325 000 பெண்களும் அடங்குவர். பெண்கள் விவசாய பயிர் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி மற்றும் விவசாயம் அல்லாத பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருமானம் ஈட்டுகின்றனர். மாவட்டத்தில் பெண்-தலைமை தாங்கும் குடும்பங்கள் 36 000 உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 346 கிராம சேவக பிரிவுகள் உள்ளன. அடிப் படைத் தேவைகளைப் பொறுத்தமட்டில், 87 பிரிவுகளுக்குக் குழாய் மூலம் தண்ணீர் கிடைப்பதில்லை. 250 பிரிவுகளில் மட்டுமே பேருந்து/வேன்/லாரிகள் போக்குவரத்துக்கான சாலை உள்ளது, 201 பிரிவுகளில், பொதுப் போக்குவரத்தை அணுகுவதற்கான குறைந்தபட்ச தூரம் 5கிமீக்கும் அதிகமாகவுள்ளது.

134 பிரிவுகளில் பொது அல்லது தனியார் மருத்துவமனையை அணுக குறைந்தபட்சம் 5கிமீ தூரம் பயணிக்க வேண்டும். 140 பிரிவுகளில் மகப்பேறு / குழந்தை மருத்துவமனைகள் அருகிலுள்ளது. 46 பிரிவுகள் குழந்தை பருவ மேம்பாட்டு மையம் ஒன்று இல்லை, 247 பிரிவுகளில் குழந்தைகள் பூங்கா வசதிகள் இல்லை. 131 பிரிவுகளில் சந்தை / பொது அங்காடியை அணுகுவதற்கான குறைந்தபட்ச தூரம் 5கிமீ பயணிக்க வேண்டும்.

இவற்றில் கடந்த தசாப்தத்தில் 90ூ பிரிவுகள் வெள்ளத்தை எதிர்கொண்டதாகவும் 66% பிரிவுகள் வறட்சியை அனுபவித்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது




## UNDP's multi-dimensional vulnerability Index in 2023

Around 50% of the households in Sri Lanka were found to be multi-dimensionally vulnerable. Batticaloa was among the districts with higher incidence (71.1%) of vulnerability, with 55% of households found to have debt, pawned jewelery or sold household items to cope with basic needs. 61.9% of households lacked financial savings and capacity to adapt to disasters. 49.7% of the households lacked safe and sustainable water sources.

## UNDP பல்பரிமாணப் பாதிப்புக் குறியீடு 2023

இலங்கையில் சுமார் 50% குடும்பங்கள் பல்பரிமாணப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். 55% குடும்பங்கள், அடிப்படைத் தேவைகளைச் சமாளிப்பதற்காக, கடன், நகைகளை அடகு வைத்தல் அல்லது வீட்டுப் பொருட்களை விற்றல் போன்ற பாதிப்புகள் அதிகமாகவுள்ள மாவட்டங்களில் மட்டக்களப்பும்(71.1%) ஒன்றாகும். இதில் 61.9%ஆன குடும்பங்கள் பேரழிவுகளை எதிர்கொள்ளும் திறனற்றவர்களாக உள்ளனர். 49.7%ஆன குடும்பங்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான நீர் ஆதாரங்கள் இல்லை.

## Poverty-line 2023-2024 – Dept of Census and Statistics

The number of households in the country who are living under the poverty-line, which calculates the minimum expenditure per person per month to fulfill the basic needs, doubled within two-years since the economic crisis hit in 2022.

In the Batticaloa district the current (September 2024) poverty-line has been calculated as Rs. 16 160. For a family of four people, a monthly income of Rs. 64 640 is required to meet the poverty-line.

Around 8 000 pensioners live in the district and 12 800 receive elderly allowance and 30 000 receive public assistance. Approximately 7 200 persons live with disabilities, while only half are receiving disability benefits. Close to 100 000 beneficiaries received Samurdhi benefits in 2022.

## வறுமைக்–கோடு 2023–2024 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2022ல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதில் இருந்து, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு குறைந்தபட்ச செலவைக் கணக்கிடும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை, இரண்டு ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய (செப்டம்பர் 2024) வறுமைக்-கோடு ரூ. 16 160 ஆகும். இதன் அடிப்படையில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு தேவையான வறுமைக் கோட்டு மாத வருமானம் ரூ. 64 640.

மாவட்டத்தில் சுமார் 8 000 ஓய்வூதியதாரர்கள் மற்றும் 12 800பேர் முதியோர் உதவித்தொகையையும் 30 000பேர் பொது உதவியையும் பெறுகின்றனர். அண்ணளவாக 7 200 மாற்றுத்திறனாளிகளில், பாதிப்பேர் மட்டுமே மாற்றுத் திறனாளிகளுக்கான நலன்களைப் பெறுகின்றனர். 2022இல் 100 000 பயனாளிகள் சமுர்த்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டனர்.

# Nutrition and meal habits / போசாக்கும் உணவுப் பழக்கமும்

Food insecurity was a prevailing problem for women in the lower economic status, even before the economic crisis. However, after the crisis hit in 2022 they were forced to make drastic changes in their diets and meal habits. The women related the reduction in food consumption in their families as their most tangible experience of the economic crisis. According to the FAO and WFP survey in 2023, food insecurity was around 25% in the Batticaloa district.

Women have adopted different coping strategies to deal with the food insecurity. One was to reduce the number of meals consumed to two or one per day. Breakfast is no longer considered as a meal-time by most families. Furthermore, the composition of a meal has also changed after the crisis. In a coastal district like Batticaloa, fish was the regular protein. However, after the crisis the number of meals consumed with any protein intake has reduced. Rice is consumed alone without the accompaniment of curries.

As related by the women, meals are consumed just to satisfy hunger as they are no longer able to afford nutritious food for the family. The women worry about the children's nutrition particularly as they can observe their heights don't meet the recommended age. Nutrition levels among pregnant mothers also became a concern, particularly when triposha supplies ran out. Shortages of imported milk powder in the market also contributed to the challenge for the women.

Disabled women related experiences that were comparatively worse than others in relation to food consumption. The one meal per day they consumed is also diluted by adding water into rice to increase the quantity of the portions shared within the family. They also reported more fatigue and inability to physically function due to lack of proper nutritious meals.

பொருளாதார நெருக்கடிக்கு முன்பே பெண்களின் குறைந்த சமூக-பொருளாதார நிலை காரணமாக உணவுப் பாதுகாப்பின்மை நிலவும் பிரச்சனையாக இருந்தது. இருப்பினும், 2022இல் ஏற்பட்ட நெருக்கடிக்குப்பின், அவர்கள் தங்கள் உணவுப் பழக்கங்களில் கடுமையான மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பெண்கள் தங்கள் குடும்பங்களில் உணவு நுகர்வு குறைவதை பொருளாதார நெருக்கடியின் மிகவும் உறுதியான அனுபவமாக தெரிவித்தனர். 2023இல் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் உலக உணவுத் திட்டம்(WFP) மேற்கொண்ட கணக்கெடுப்பின் படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பின்மை 25%ஆக அதிகரித்தது.

உணவுப் பாதுகாப்பின்மையைச் சமாளிக்க பெண்கள் பல்வேறு உத்திகளைக் கடைப்பிடித்துள்ளனர். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது ஒரு வேளை மட்டும் உண்கின்றனர், உணவு வேளைகளைக் குறைத்தல். பெரும்பாலான குடும்பங்களில் காலையுணவு என்பதே இல்லாது போய்விட்டது. மேலும் நெருக்கடிக்குப் பின் உணவின் தன்மையும் மாறிவிட்டது. மட்டக்களப்பு போன்ற கடலோர மாவட்டத்தில் மீன் பிரதான புரதமாக உட்கொள்ளப்பட்டது. இருப்பினும், நெருக்கடிக்குப் பிறகு, புரத உணவு உட்கொள்ளல் குறைந்துள்ளதோடு, கறிகளுடன் உண்பதற்குப் பதிலாக சோறு மட்டும் உட்கொள்ளப்படுகின்றது.

பெண்களின் கூற்றுப்படி, பசியைப் போக்குவதற்காகவே உணவு உட்கொள்ளப்படுகிறதே ஒழிய குடும்பத்திற்கு தேவையான சத்தான உணவுகளை வாங்க முடியாதுள்ளது. குறிப்பாக அவர்களின் உயரம் பரிந்துரைக்கப்பட்ட வயதை எட்டாததை அவதானிக்க முடிவதால், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்து பெண்கள் கவலைப்படுகிறார்கள். குறிப்பாக திரிபோஷா தீர்ந்து போனபோது, கர்ப்பிணித் தாய்மார்களிடையே ஊட்டச்சத்தின் அளவும் கவலைக்குரியதாக மாறியது, சந்தையில் பால் மாவுக்கான தட்டுப்பாடு மேலும் பெண்களுக்கு சவாலாக மாறியது.

மாற்றுத்திறனாளி பெண்கள் தொடர்பான அனுபவங்கள், உணவு நுகர்வு தொடர்பாக மற்றவர்களை விட மோசமாக இருந்தது. அவர்கள் உண்ணும் ஒரு வேளை உணவும் குடும்பத்திற்கு போதியளவாக அதிகரிக்க அரிசியில் தண்ணீர் சேர்த்து உட்கொள்ளப்படுகின்றது. சரியான சத்தான உணவுகள் இல்லாததால் அதிக சோர்வு மற்றும் உடல் இயலாமையை அனுபவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

# Cost of living / விலைவாசி

The drastic increase in the prices of food, medicines and basic items, was the main reason for the hardships encountered by the women during the economic crisis. Their incomes became insufficient to meet the household costs. By November 2022, food inflation peaked at 90% with headline inflation at 70% in the country. Although inflation figures reduced in the subsequent years, prices continue to remain high.

If a family member falls ill, accessing even the free public health services has become challenging, due to medicinal shortages and not having the means to buy medicines from private pharmacies. Women related how they miss appointments for clinics and do not take the full dosage of the medicines prescribed for them. Importation of low quality drugs affected people's trust in the system.

Medical expenditure for disabled women is comparatively higher and the crisis made it impossible for them to access healthcare, including for routine checkups, prosthetics and assistive gadgets. Transwomen also related their experiences of not being able to afford hormonal treatments any longer.

Increase in fuel prices contributed to the rise in prices for all goods and services and transport costs. Furthermore, it impacted women's ability to support their children's education, sustain their livelihoods and engage in paid labour further from their homes. Women expressed fear that they would not be able to support their children to complete their education and agony that they are no longer able to express love and joy by simple acts of cooking a special meal, buying a small gift or holding a celebration for birthdays and other special days for their family members.

The government removed the subsidies provided for basic utilities such as electricity and water as directed by the IMF to move towards market pricing. Most of the women interviewed had lost their electricity connection temporarily due to their inability to pay monthly electricity bills. Some have not been able to regain their electricity connections as the arrears amounts have accumulated beyond their capacity to ever settle it back.

உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் அடிப்படைப் பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதே பொருளாதார நெருக்கடியின் போது பெண்கள் சந்தித்த இன்னல்களுக்கு முக்கிய காரணமாகும். அவர்களது வருமானம் வீட்டுச் செலவுக்கே போதுமானதாக இல்லை. உணவுப் பணவீக்கம் 2022 நவம்பரில் 90%ஆக உயர்ந்தது, நாட்டின் மொத்த பணவீக்கம் 70%ஆக இருந்தது. அடுத்தடுத்த ஆண்டுகளில் பணவீக்கம் குறைந்தாலும், விலைகள் குறையவில்லை.

ஒரு குடும்ப உறுப்பினர் நோய்வாய்ப்பட்டால், மருந்துப் பற்றாக்குறை காரணமாக தனியார் மருந்தகங்களில் வாங்குவதற்கு வழியில்லாமல் இருப்பதால், இலவச பொது சுகாதார சேவைகளை அனுபவிப்பது சவாலாகியுள்ளது. கிளினிக்குக ளுக்கான சந்திப்புகளைத் தவறவிடுவது மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை முழுமையாக எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்வது, அமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கையை பாதித்தது.

மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான மருத்துவச் செலவு ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது மற்றும் நெருக்கடியால் அவர்கள் வழக்கமான சோதனைகள், செயற்கை கால்கள் மற்றும் உதவிக் கருவிகள் உட்பட மருத்துவப்பாராமரிப்பை அணுக முடியாமல் உள்ளது. திருநங்கைகள் தங்களுக்கு தொடர்ச்சியாகத் தேவைப் படும் ஹார்மோன் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளவது சிரமமாகவுள்ளது என்று தெரிவித்தனர்.

எரிபொருள் விலையுயர்வு அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையுயர்வுக்கும் போக்குவரத்துச் செலவு அதிகரிப்புக்கும் பங்களித்தது. இது குழந்தைகளின் கல்வி, பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் கூலித் தொழிலில் ஈடுபடுவதையும் பாதித்தது. தங்கள் பிள்ளைகளின் படிப்பை பூர்த்திசெய்ய முடியாமல் போய்விடுமோ என்று பெண்கள் அச்சம் தெரிவித்தனர். பிறந்த நாள் போன்ற விசேட தினங்களில் தங்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு விசேட உணவை சமைப்பது அல்லது பரிசு வாங்கிக் கொண்டாடுவது போன்ற சிறிய அன்பையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் விடயங்களை செய்ய முடியாதுள்ளது.

மின்சாரம் மற்றும் நீர் போன்ற அடிப்படை வசதிகளுக்கு வழங்கப்பட்ட மானியங்களை, சந்தை விலை நிர்ணயத்தை நோக்கி நகர்த்த IMF அறிவுறுத்தியபடி அரசாங்கம் நீக்கியது. நேர்காணலின்போது பெரும்பாலான பெண்கள் மாதாந்த மின்கட்டணத்தைச் செலுத்த முடியாததால் தற்காலிகமாக மின் இணைப்பை இழந்துள்ளனர். மேலும் சிலர் கட்ட வேண்டிய மொத்தத் தொகையை கட்ட முடியாததால் மின் இணைப்புகளை இன்னும் திரும்பப் பெற முடியவில்லை.

# Dispossession / உடமையிழப்பு

Indebtedness has been a major cause for dispossession since the end of the war in the Batticaloa District. The economic crisis has further exacerbated the issue of household debt. The Government increased interest rates making household debt and obtaining loans for income generating activities costly for women. Regardless, women were forced to obtain loans as the only option to cope with the cost-of-living.

Profit-oriented companies saw a market opportunity and expanded exploitative loan schemes including day-rate loans and online loans. The losses caused by engaging in economic activities where the cost of production increased while demand was low also led women to further fall into debt and abandon their livelihoods.

Given higher gold prices, women pawned their jewellery and also sold the assets they owned, from household items to vehicles and sometimes even lost the land they owned. They used the money to spend on essential items, pay off other debts or find employment overseas to cope with the crisis.

Dispossession has long-term consequences as women lose their emergency savings to withstand future shocks in a highly precarious context. Women also lose their ability to engage in economically productive activities when they lose the assets they managed to accumulate over decades and sometimes generations. Collectively, the community suffers as there are less economic resources circulating within the community.

In the Batticaloa District, the women have previously faced multiple cycles of dispossession, caused by the war, Tsunami and other natural disasters, easter bombings and the global pandemic. The current cycle of dispossession is taking away the little they have managed to preserve in the past.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் கடன்சுமையே மக்களின் உடமையிழப்புக்கு முக்கிய காரணமாகும். பொருளாதார நெருக்கடி வீட்டுக் கடன் பிரச்சினையை மேலும் மோசமாக்கியுள்ளது. அரசாங்கம் வட்டி விகிதங்களை அதிகரித்தது, வீட்டுக் கடனையும், வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கான கடன்களைப் பெறுவதையும் பெண்களுக்கு செலவு செய்கிறதை பொருட்படுத்தாமல், வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கான ஒரே விருப்பமாக பெண்கள் கடன்களைப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இலாப நோக்குடைய நிறுவனங்கள் சந்தை வாய்ப்பைக் கண்டு நாள்-விகிதக் கடன்கள் மற்றும் ஆன்லைன் கடன்கள் உள்ளிட்ட சுரண்டல் கடன் திட்டங்களை விரிவுபடுத்தியது. தேவை குறைவாக இருக்கும் போது உற்பத்திச் செலவு அதிகரித்து பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் இழப்புகள் பெண்களை மேலும் கடனில் விழுந்து தங்கள் வாழ்வாதாரத்தை கைவிட வழிவகுத்தது.

தங்கம் விலை உயர்ந்ததால், பெண்கள் தங்களுடைய நகைகளை அடகு வைத்து, அவர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், வீட்டுப் பொருட்கள் முதல் வாகனங்கள் வரை விற்றனர், சில சமயங்களில் தங்களுக்குச் சொந்தமான நிலத்தையும் இழந்தனர். நெருக்கடியைச் சமாளிக்க, அத்தியாவசியப் பொருட்களுக்குச் செலவழிக்கவும், கடன்களைச் செலுத்தவும் அல்லது வெளிநாடுகளில் வேலை தேடவும் பணத்தைப் பயன்படுத்தினர்.

எதிர்கால அதிர்ச்சிகளைத் தாங்கும் வகையில் பெண்களிடமுள்ள அவசரகாலச் சேமிப்பை இழக்க நேரிடும் என்பதால், உடமையிழப்பு நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துகிறது. பெண்கள் பல தசாப்தங்களாகவும் சில சமயங்களில் தலைமுறைகளாகவும் குவித்து வைத்திருக்கும் சொத்துக்களை இழக்கும்போது, பொருளாதார ரீதியாக உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் திறனையும் இழக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக, சமூகத்தில் குறைவான பொருளாதார வளங்கள் புழக்கத்தில் இருப்பதால் சமூகம் பாதிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், யுத்தம், சுனாமி மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்கள், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் உலகளாவிய தொற்று நோயினால் பல உடமையிழப்பு சுழற்சிகளை பெண்கள் முன்னர் எதிர்கொண்டுள்ளனர். தற்போதைய உடமையிழப்பு சுழற்சியானது கடந்த காலத்தில் அவர்கள் பாதுகாத்து வைத்திருந்த சிறிதளவுகளையும் எடுத்துச் செல்கிறது.

# Women's Labour / பெண்களின் உழைப்பு

Women engaged in home gardening, fishing, and agricultural and livestock production found the cost of production increase due to price increases of raw materials, fertilizers, animal feed and fuel. Example, 50kgs of fertilizer costs Rs. 40 000 and a kilo of seed paddy is around Rs. 250. However, due to low consumer demand, the costs were not recovered, eventually forcing them to abandon their economic activities. Women's income generating capacities were greatly reduced by harsh market conditions.

Most women engaged in daily-wage labour after the crisis, often opting to do any job that comes their way. Although the day-wage increased to Rs. 2 500, the number of days women were able to find employment was reduced. With male family members becoming unemployed women proceeded to obtain work as they could be employed for cheaper wages and do jobs that men would not do. Men and women also attempted to migrate abroad in large numbers after the economic crisis.

Women in the Batticaloa district working in garment factories are able to receive a monthly salary above the minimum wage of Rs. 21 000, and are eligible for employee provident fund benefits. However, the government has decided to cut the EFP provisions for workers, which is often their only savings, as part of its economic recovery plan and domestic debt restructuring.

Disabled women and trans women face more challenges in finding employment in the midst of the economic crisis due to continuing discriminatory policies and lack of facilities, including accessibility and appropriate washrooms in their workplaces. Disabled women face wage discrimination and trans workers are often threatened with violence in their workplaces.

Significantly, women's unpaid labour in their homes, taking care of the elderly and children increased due to the economic crisis. The burdens of a failed market and a government's economic recovery plan ensured that women were left to bear the brunt of the crisis upon their shoulders.

வீட்டுத்தோட்டம், மீன்பிடித்தல், விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்கள் மூலப்பொருட்கள், உரங்கள், கால்நடை தீவனம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் உற்பத்திச் செலவு அதிகரிப்பதைக் கண்டனர். உதாரணமாக, 50 கிலோ உரம் ரூ. 40 000 மற்றும் ஒரு கிலோ விதை நெல் சுமார் ரூ. 250. இருப்பினும், குறைந்த நுகர்வோர் தேவை காரணமாக, அவர்களால் செலவுகளை மீட்டெடுக்க முடியவில்லை, இறுதியில் அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இத்தகைய கடுமையான சந்தை நிலைமைகள் காரணமாக பெண்களின் வருமானம் ஈட்டும் திறன் வெகுவாகக் குறைக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு பெரும்பாலான பெண்கள் அன்றாடக் கூலித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர், பெரும்பாலும் தங்கள் வழியில் வரும் எந்த வேலையையும் செய்கின்றனர். நாளுக்கு நாள் ஊதியம் ரூ.2 500ஆக அதிகரித்தாலும், வேலை நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. ஆண் குடும்ப உறுப்பினர்கள் வேலையில்லாமல் போனதால், குறைந்த ஊதியத்தில் வேலைக்கு அமர்த்தப்படலாம் மற்றும் ஆண்கள் செய்யாத வேலைகளைச் செய்யலாம் என்பதால் பெண்கள் வேலைகளை செய்கின்றனர். பொருளாதார நெருக்கடிக்குப்பின் ஆண்களும் பெண்களும் அதிகளவில் வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் குறைந்தபட்ச சம்பளமான ரூ.21 000க்கு மேல் மாதாந்த சம்பளத்தை பெறுவதுடன் மற்றும் ஊழியர் சேமலாப நிதி நன்மைகளுக்கு தகுதியுடையவராவர். எவ்வாறாயினும், அரசாங்கம் அதன் பொருளாதார மீட்புத் திட்டம் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக தொழிலாளர்களுக்கான EPF ஒதுக்கீடுகளை குறைக்க முடிவு செய்துள்ளது.

மாற்றுத்திறனாளிப் பெண்கள் மற்றும் திருநங்கைகள் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் தொடர்ந்து பாரபட்சமான கொள்கைகள் மற்றும் அவர்களின் பணியிடங்களில் புகுதல் மற்றும் பொருத்தமான கழிவறைகள் உள்ளிட்ட வசதிகள் இல்லாமை காரணமாக வேலை தேடுவதில் அதிக சவால்களை எதிர்கொள்கின்றனர். மாற்றுத்திறனாளி பெண்கள் ஊதிய பாகுபாட்டை எதிர்கொள்கின்றனர். திருநங்கைகள் தங்கள் பணியிடங்களில் வன்முறையால் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

குறிப்பிடத்தக்க வகையில், பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்கள் தங்கள் வீடுகளில் ஊதியமில்லாத உழைப்பு, முதியவர்கள் மற்றும் குழந்தைகளை கவனித்துக் கொள்வது அதிகரித்துள்ளது. தோல்வியுற்ற சந்தையின் சுமைகள் மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார மீட்சித் திட்டம் ஆகியவை பெண்கள் தங்கள் தோள்களில் நெருக்கடியின் சுமைகளை சுமக்க விடப்படுவதை உறுதி செய்தன.

# Social Relations / சமூக உறவுகள்

The economic crisis and the austerity conditions created by it has upended women's lives, their families and local communities in significant ways.

Women have had to deprive themselves of basic needs by foregoing meals, healthcare and rest and take on more labour, paid and unpaid, to survive the economic crisis. It has taken a toll on them physically and mentally and altered their relationship with others.

The changes in family dynamics has somewhat disturbed the gender hierarchy. With widespread unemployment among men, women have had to take on more of the burden of earning a living, including spending mor e time outside the home. However, the increased economic pressures has also led to an increase in violence faced by the women, from intimate partners, money-lenders and employers. Families where adult-members are absent or where grandparents have assumed the main parenting roles are increasing due to economic migration.

In the villages, the women have observed a breakdown in organic solidarities and support networks due to the decline in people's economic capacities and loss of assets to lend a helping hand to each other. Migration from the villages have also contributed to this transformation.

At the workplace, women are finding it more challenging to organise and resist against exploitative working conditions, given the constant threat of being fired. The power of employers have increased, with the further threat of regressive labour laws eroding the power working people have won over the decades.

On the contrary, greater realisation of the importance of having strong local food systems and land-ownership to withstand market failures has created opportunities for women to explore different economic models, including by participation in cooperatives and mutual aid arrangements.

பொருளாதார நெருக்கடி மற்றும் அது உருவாக்கிய சிக்கன நிலைமைகள் பெண்களின் வாழ்க்கை, அவர்களது குடும்பங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களை குறிப்பிடத்தக்க வழிகளில் மாற்றியுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க, உணவு, சுகாதாரம் மற்றும் ஓய்வு ஆகிய அடிப்படைத் தேவைகளை பெண்கள் இழக்க வேண்டியிருந்தது. இது அவர்களை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதித்தது மற்றும் மற்றவர்களு டனான அவர்களின் உறவை மாற்றியது.

குடும்ப இயக்கவியலில் ஏற்பட்ட மாற்றங்கள் பாலினப் படிநிலையை ஓரளவு சீர்குலைத்துள்ளது. ஆண்களிடையே பரவலான வேலையின்மையால், வீட்டை விட்டு வெளியே அதிக நேரம் செலவிட்டு வருமானம் சம்பாதிக்கும் சுமையை பெண்கள் அதிகம் சுமக்க வேண்டியிருந்தது. இருப்பினும், அதிகரித்த பொருளாதார அழுத்தங்கள், நெருக்கமான துணைவர், கடன் கொடுப்பவர்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை அதிகரிப் பதற்கும் வழிவகுத்தது. பொருளாதார புலம்பெயர்வுகள் காரணமாக வீட்டில் வயதுவந்தோர் இல்லாத அல்லது தாத்தா, பாட்டி முக்கிய பெற்றோருக்குரிய பாத்திரங்களை ஏற்றுக்கொண்ட குடும்பங்கள் அதிகரித்து வருகின்றன.

கிராமங்களில், இயற்கையான தோழமை மற்றும் ஒருவருக்கு ஒருவர் கைகொடுக்கும் ஆதரவு வலையமைப்புக்கள் மக்களின் பொருளாதாரத் திறன்கள் மற்றும் சொத்துக்களை இழந்ததன் காரணமாக, முறிந்து போவதை பெண்கள் அவதானித்துள்ளனர். கிராமங்களில் இருந்து இடம்பெயர்வதும் இந்த மாற்றத்திற்கு பங்களித்துள்ளது.

பணியிடத்தில், பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்ற தொடர்ச்சியான அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, சுரண்டல் வேலை நிலைமைகளுக்கு எதிராக ஒழுங்கமைத்து எதிர்ப்பதை பெண்கள் மிகவும் சவாலாகக் காண்கிறார்கள். முதலாளிகளின் அதிகாரம் அதிகரித்துள்ளதால், பல தசாப்தங்களாக உழைக்கும் மக்கள் வென்றெடுத்த அதிகாரத்தை அரிக்கும் பிற்போக்கு தொழிலாளர் சட்டங்களின் அச்சுறுத்தலும் உருவாகியுள்ளது.

மாறாக, சந்தை தோல்விகளைத் தாங்குவதற்கு வலுவான உள்ளூர் உணவு முறைமைகள் மற்றும் நில உடைமை ஆகியவற்றைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றிய அதிக உணர்தலும், கூட்டுறவுகளில் பங்கேற்பது மற்றும் பரஸ்பர உதவி ஏற்பாடுகள் உட்பட பல்வேறு பொருளாதார மாதிரிகளை ஆராய்வதற்கான நாடலும் பெண்களிடையே உருவாக்கியுள்ளது.

The responses by the state to alleviate people's suffering was minimal. Given the austerity policies the women observed a decline in the usual services and initiatives by the state in their localities. Example, development of local infrastructure facilities through the RDS and WRDS and livelihoods support. The Government only distributed rice packages to the families as a response to the food insecurity.

The recovery plan in the agreement with the IMF included recommendations to address the economic hardships faced by the poor in the country, to provide a social safety-net with an allocation of 0.6% of GDP, which was hugely inadequate to address the magnitude of the suffering. The Government resorted to replace the Samurdhi programme with Aswesuma, which is a targeted cash-transfer programme with the aim of completely phasing out in a few years.

The new programme was a dismal failure. The selection criteria failed to capture the complexities of poverty and disability experienced by the women and selection process itself was not gender sensitive. The targeted scheme left out many poor women and disabled women. The conservative and normative definitions of a family-unit adopted also left out older single women, disabled women and queer households. Furthermore, the linear approach adopted fails to acknowledge poverty as a result of a precarious economic structure and the specific conditions under which people became destitute. Thus, policy-makers are not able to see the need for a universal social protection system that covers the full life-cycle.

Relating their experiences of living and labouring amidst the economic crisis, the women who participated in the research expressed how perplexed they were by the apathy shown by the state towards the deep suffering of the people. With frustration in their tones, they asked if the government was blind. The Government and the economic experts who provided credence to the disastrous policies that had devastated people's lives repeatedly spoke of 'stability.' They continued to view the macro-economic performance indicators siloed from the social indicators that clearly showed the decline in people's living standards. What they meant as stability, manifested as instability for the women who were part of this research.

The blind state can be interpreted as a deliberate ideological response by a Government that was aligned with the class interests of the elites and global financial capital. Thus, it is by design rather than coincidence that women are made to bear the brunt of the economic crisis. The Government's plan meant that women were left to manage their households without adequate support from the state.

மக்களின் துன்பத்தைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் குறைவாகவே இருந்தன. சிக்கனக் கொள்கை காரணமாக பெண்கள் தங்கள் கிராமங்களில் அரசின் வழக்கமான சேவைகள் மற்றும் முயற்சிகளில் சரிவைக் கண்டனர். உதாரணம், RDS மற்றும் WRDS மூலம் உள்ளூர் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாதார ஆதரவு. உணவுப் பற்றாக்குறைக்கு பதில் அளிக்கும் வகையில் அரசு அரிசி பொட்டலங்களை மட்டுமே குடும்பங்களுக்கு வழங்கியது.

IMF உடனான ஒப்பந்தத்திலுள்ள மீட்புத்திட்டத்தில், நாட்டிலுள்ள ஏழைகள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6% ஒதுக்கீடு மாத்திரமே சமூக பாதுகாப்பு வலையை வழங்குவதற்கான பரிந்துரைகள் அடங்கியிருந்தது. சமுர்த்தி திட்டத்திற்குப் பதிலாக அஸ்வெசுமா என்ற திட்டத்தை அரசாங்கம் அமுல்ப்படுத்தியது. இது ஒரு சில ஆண்டுகளில் முற்றாக நிறுத்தப்படும் நோக்கத்துடன் இலக்குவைத்த பண பரிமாற்ற திட்டமாகும்.

புதிய திட்டம் படுதோல்வி அடைந்தது. தேர்வு அளவுகோல்கள் பெண்கள் அனுபவிக்கும் வறுமை மற்றும் மாற்றுத்திறனாளிகளின் சிக்கல்களைக் புரிந்துகொள்ளத் தவறிவிட்டன. இலக்குவைத்த திட்டம் பல ஏழைப் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிப் பெண்களை உள்வாங்கத் தவறிவிட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட குடும்ப-அலகுக்கான பழமைவாத வரையறைகள் வயதான ஒற்றைப் பெண்கள், மாற்றுத்திறனாளிப் பெண்கள் மற்றும் உயர் சமூகக் குடும்பங்களை அங்கீகரிப்பதில்லை. மேலும், கடைப்பிடிக்கப்பட்ட நேரியல் அணுகுமுறை, ஒரு நிரந்தரமற்ற பொருளாதாரக் கட்டமைப்பின் விளைவாக வறுமை உருவாகுவதை மற்றும் மக்கள் வலுவிழந்தவர்களாக மாற பங்களித்த குறிப்பிட்ட நிலைமைகளை ஒப்புக்கொள்ளத் தவறியுள்ளது. எனவே, முழு வாழ்க்கைச் சுழற்சியையும் உள்ளடக்கிய உலகளாவிய சமூகப் பாதுகாப்பு அமைப்பின் அவசியத்தை கொள்கை வகுப்பாளர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

மக்களின் ஆழ்ந்த துன்பங்களுக்கு அரசு காட்டும் அக்கறையின்மையால் தாங்கள் எவ்வளவு குழப்பமடைந்துள்ளனர் என்பதை பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்ந்த மற்றும் உழைத்த அனுபவங்களைத் தெரிவித்த பெண்கள் வெளிப்படுத்தினர். அவர்களின் தொனியில் விரக்தியுடன், அரசாங்கம் குருடாக இருக்கிறதா என்று கேட்டார்கள். அரசாங்கமும் மக்களின் வாழ்வை சீரழித்த பேரழிவுக் கொள்கைகளுக்கு நற்சான்றிதழ் வழங்கிய பொருளாதார வல்லுநர்களும் 'ஸ்திரத்தன்மை' பற்றித் திரும்பத்திரும்பப் பேசினர். பேரினப் பொருளாதார குறிகாட்டிகளை மட்டும் அவர்கள் கருத்தில்கொண்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தில் சரிவைத் தெளிவாகக் காட்டுகின்றன சமூகக் குறிகாட்டிகளை கவனியாதுவிட்டனர். அவர்களுக்கு ஸ்திரத்தன்மையாக அமைந்த பொருளாதாரம், பெண்களுக்கு ஸ்திரமற்றதன்மையை உருவாக்கியது.

குருட்டு அரசு என்பது உயரடுக்கின் வர்க்க நலன்கள் மற்றும் உலக நிதி மூலதனத்தின் வர்க்க நலன்களுடன் இணைந்து செயற்படுகின்ற ஒரு அரசாங்கத்தின் வேண்டுமென்றே கருத்தியல் பதில் என்று விளக்கப்படலாம். எனவே, தற்செயலாக இல்லாமல் வடிவமைப்பால் பெண்கள் பொருளாதார நெருக்கடியின் சுமைகளை சுமக்கிறார்கள். அரசின் போதிய ஆதரவின்றி பெண்கள் தங்கள் குடும்பங்களை நிர்வகிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது அரசின் திட்டமாகும்.

The magnitude of the economic crisis calls for a robust programme to support those who are most affected by the crisis. No such programmes have emerged in the last two years, further adding to the pain experienced by the women. However, women continue to face the brunt of the economic crisis as they carry the double burden of earning a living and engage in carework. The impact of the crisis as revealed in this research threatens to unravel the gains made towards women's advancement in the Batticaloa District and in Sri Lanka.

The women commented about the lack of clarity on the government's actions and how they have impacted women's lives. In the last two years women's groups have created space for educating each other on the economic crisis and brainstorm possible alternatives. In Batticaloa, a group of women's activists began a daily justice walk that has been sustained for two years with the hope of raising awareness of the continuing impact of the economic crisis. There is still a need to document women's experiences of the economic crisis and raising the consciousness among women of how the global financial architecture and state structures are designed to exploit women for the benefit of global capital.

There have also been efforts to organise themselves at the local level, to pressure government officials to provide better support and to mobilise for a better social protection system. Women have also attempted to organise themselves to withstand the harsh economic realities by participating in cooperatives and mutual aid systems. However, such initiatives require concerted policy support and investments to succeed.

The women interviewed shared their ideas for an alternative recovery plan from the government that centers on strengthening the local food system, increasing economic productivity, investing in public health and education and implementing a universal social protection programme. The women are demanding from the government a clearly formulated policy that has collective resonance across women's groups in the country, that recognises the significant contribution women make to the economy and the impact of the economy on women's lives.

பாரிய பொருளாதார நெருக்கடியில், அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்க ஒரு வலுவான வேலைத்திட்டம் தேவை. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் இதுபோன்ற திட்டங்கள் எதுவும் வெளிவரவில்லை. இது பெண்கள் அனுபவிக்கும் வேதனையை மேலும் அதிகரிக்கின்றது. இருப்பினும், பெண்கள் பொருளாதார நெருக்கடியின் சுமையோடு, இரட்டைச்சுமைகளான வருமானம் சம்பாதித்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படி நெருக்கடியின் தாக்கம், மட்டக்களப்பு மாவட்டத்திலும் இலங்கையிலும் பெண்களின் முன்னேற்றத்திற்கு கிடைத்த வெற்றிகளை திருப்பிப்போடும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் அவை எவ்வாறு பெண்களின் வாழ்க்கையை பாதிக்கின்றன என்பது குறித்து தெளிவின்மை நிலவுகின்றதென பெண்கள் கருத்துத் தெரிவித்தனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் பெண்கள் குழுக்கள் பொருளாதார நெருக்கடி குறித்து ஒருவருக்கொருவர் கல்வி கற்பதற்கும் சாத்தியமான மாற்று வழிகளை பற்றிச் சிந்திக்கவும் ஒரு பரப்பை உருவாக்கியுள்ளனர். மட்டக்களப்பில், பொருளாதார நெருக்கடியின் தொடர்ச்சியான தாக்கம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நம்பிக்கையுடன் இரண்டு வருடங்களாக தினசரி நீதி நடைப் பயணத்தை பெண் செயற்பாட்டாளர்கள் நடத்தி வருகின்றனர். பொருளாதார நெருக்கடி சார்ந்த பெண்களின் அனுபவங்களை ஆவணப்படுத்தல் மற்றும் உலக மூலதனத்தின் நலனுக்காக உருவாக்கப்பட்ட உலக நிதிக் கட்டமைப்பும் அரசுக் கட்டமைப்பும் எவ்வாறு பெண்களைச் சுரண்டுவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது என்பதைப் பற்றிய விழிப்புணர்வை பெண்களிடையே எழுப்புவதும் இன்னும் தேவையாக உள்ளது.

உள்ளூர் மட்டத்தில், பெண்கள் குழுக்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு சிறந்த ஆதரவை வழங்க அழுத்தம் கொடுக்கவும், சிறந்த சமூகப் பாதுகாப்பு அமைப்புக்காக அணிதிரட்டவும் தங்களை ஒழுங்கமைத்துக் கொண்டுள்ளனர். கூட்டுறவு மற்றும் பரஸ்பர உதவி அமைப்புகளில் பங்கேற்பதன் மூலம் கடுமையான பொருளாதார யதார்த்தங்களைத் தாங்கிக்கொள்ள பெண்கள் தங்களை ஒழுங்கமைக்க முயற்சித்துள்ளனர். இருப்பினும், அத்தகைய முயற்சிகள் வெற்றிபெற ஒருங்கிணைந்த கொள்கை ஆதரவு மற்றும் முதலீடுகள் தேவையாகும்.

ஆராய்ச்சியில் பங்குகொண்ட பெண்கள், உள்ளூர் உணவு முறையை வலுப் படுத்துதல், பொருளாதார உற்பத்தியை அதிகரித்தல், பொது சுகாதாரம் மற்றும் கல்வியில் முதலீடு செய்தல் மற்றும் உலகளாவிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மாற்று மீட்புத்திட்டத்திற்கான தங்கள் யோசனைகளைப் பகிர்ந்து கொண்டனர். பெண்கள் பொருளாதாரத்தில் செய்யும் குறிப்பிடத்தக்க பங்களிப்பையும், பெண்களின் வாழ்வில் பொருளாதாரத்தின் தாக்கத்தையும் அங்கீகரிக்கும் வகையில், நாட்டில் உள்ள பெண்கள் அமைப்புக் களிடையே கூட்டு எதிரொலியைக் கொண்டிருக்கும், தெளிவாக வடிவமைக்கப்பட்ட கொள்கை ஒன்றை உருவாக்கும்படியாக பெண்கள் கோருகின்றனர்.

# சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

இல.4/1, தோமஸ் லேன், மட்டக்களப்பு.

# SURIYA WOMEN'S DEVELOPMENT CENTRE

No.4/1, Thomas Lane, Batticaloa, Sri Lanka

T.P No. : 065-2223297, 065-2224657

suriyawomen1991@gmail.com